# வங்கிகளில் நகை, பணம், ஆவணங்களை பாதுகாக்க புதிய ரோபாடிக் லாக்கர்

சென்னை, ஆக. 4

கோத்ரெஜ் குரூப்பின் ஒரு அங்கமான கோத்ரெஜ் செக்யூரிட்டி சொல்யூஷன்ஸ், வங்கி லாக்கர் பயன்பாட்டில் புதிய தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. தற்போது நடைமுறையில் இருந்து வரும் லாக்கர் அமைப்புக்குப் பதிலாக ரோபாடிக் தொழில்நுட்பத்துடன் கூடிய புதிய லாக்கர் அமைப்பை அறிமுகம் செய்துள்ளது. சென்னையில், இந்நிறுவனத்தின் பி2பி பிரிவின் தலைவர் புஷ்கர் கோகலே, இந்த ரோபாடிக் லாக்கர் அமைப்பினை அறிமுகம் செய்தார்.

வங்கிப் பயன்பாட்டை முக்கிய நோக்கமாகக் கொண்டு அதீத பாதுகாப்பு வசதியுடன் இந்த லாக்கர் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. வங்கிகளில் தனி நபருக்கு என ஒதுக்கப்படும் நகை, பணம் மற்றும் முக்கிய ஆவணங்களை பாதுகாப்பதற்கான பாதுகாப்பு பெட்டக அமைப்பில் அதிநவீன மாற்றத்தை கொண்டுவந்துள்ளோம். இந்த லாக்கர் அமைப்பு ஏடிஎம் போன்று செயல்படக்கூடியது. வங்கி செயல்படாத நேரங்கள் மற்றும் விடுமுறை நாட்களிலும் இந்த லாக்கரை வாடிக்கையாளர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று அவர் தெரிவித்தார்.

இந்த நவீன வகை ரோபாடிக் லாக்கர் அமைப்புகள் மும்பை மற்றும் குஜராத்தில் உள்ள வங்கிகளில் சென்ற ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளன. தென் இந்தியாவில் உள்ள வங்கிகளில் இதை பயன்பாட்டுக்கு கொண்டு வரும் முயற்சியில் இந்நிறுவனம் ஈடுபட்டுள்ளது.